
To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

## 20 நவம்பர் 2023 - தினசரி நடப்பு நிகழ்வுகள்

### வங்கக் கடலில் 'மிதிலி' புயல் உருவாகிறது



**செய்தி:**

- வங்காள விரிகுடாவில் உருவான **மிதிலி புயல்** வங்கதேசத்தின் கெபுபாரா அருகே கரையை கடந்தது.
- இது ஒடிசா, மேற்கு வங்கம் மற்றும் வங்கதேசத்தின் கடலோரப் பகுதிகளில் பலத்த மழை மற்றும் பலத்த காற்றைக் கொண்டு வந்தது.

**முக்கிய குறிப்புகள்:**

- கடந்த நவம்பர் 14ம் நாள் **தெற்கு அந்தமான் கடல்** பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி மறுநாள் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், நவம்பர் 16ம் நாள் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் மாறியது.
- நவம்பர் 16 ஆம் நாள்அதிகாலை **மேற்கு-மத்திய வங்காள விரிகுடாவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக** ஆந்திராவின் விசாகப்பட்டினத்திற்கு கிழக்கு-தென்கிழக்கே 380 கிலோமீட்டர் தொலைவிலும், ஒடிசாவின் பாரதீப்பிற்கு தெற்கே 380 கி.மீ தொலைவிலும் நிலை கொண்டிருந்தது.
- ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் **வடக்கு-வடகிழக்கு நோக்கி நகர்ந்து புயலாக மேலும் தீவிரமடையும்** என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. **இந்த சூறாவளி உருவானவுடன் 'மிதிலி' என்று பெயரிடப்படும் இது மாலத்தீவுகளால் வழங்கப்பட்ட பெயராகும்.**
- **அக்டோபர் மாத இறுதியில் ஹமூன் புயலுக்குப் பிறகு வங்கக்கடலில் இந்த பருவத்தின் இரண்டாவது சூறாவளி மிதிலி ஆகும்.**
- ஹமூன் புயல் அக்டோபர் 24-25 நள்ளிரவில் **மியான்மர் கடற்கரையில்** கரையை கடந்தது.

| | |
|---|---|
| **அரசு திட்டங்களில் தமிழக மாணவர்கள் பங்கேற்பு** | **செய்தி:**<br>• மாநில அரசுத் துறைகள் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்கள் மற்றும் சவால்களைத் தீர்க்கவும், சரிசெய்யவும், தொழில்நுட்ப தீர்வுகளைக் கண்டறியும் நிகழ்நேரத் திட்டங்களில் பொறியியல் மாணவர்களை ஈடுபடுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது.<br>• இந்த புதிய முயற்சியை அரசுக்கு சொந்தமான தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் (TNSDC) மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் (EDII) கண்காணிக்கும். |
| **அனைத்து மாவட்டங்களிலும் விரைவில் மினி ஜவுளி பூங்காக்கள் திறக்க பட உள்ளன .** | **செய்தி:**<br>• மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் **மினி ஜவுளிப் பூங்காக்கள்** அமைக்கப்படும் என்று கைத்தறி மற்றும் ஜவுளி துறை அமைச்சர் ஆர் காந்தி தெரிவித்தார்.<br>• இந்த மினி ஜவுளிப் பூங்காக்கள் ரூ.2.5 கோடி செலவில் உருவாக்கப்பட்டு மூன்று ஜவுளிப் பிரிவு வசதிகளுடன் அமைக்க உள்ளது .<br>• மேலும், புதிய ஜவுளிக் கொள்கையின் கீழ் செயற்கை இழை உற்பத்தியாளர்களை மாநில அரசு ஊக்குவிக்கும். |
| **தேசிய பத்திரிகை தினம்**<br><br> | **செய்தி:**<br>• இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் **நவம்பர் 16** ஆம் தேதி தேசிய பத்திரிகை தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>• இந்தியாவில் பத்திரிகைகளின் செயல்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் இது ஒரு தன்னாட்சி மற்றும் சட்டப்பூர்வ அமைப்பாக நிறுவப்பட்டது.<br>• பத்திரிக்கை சுதந்திரத்தை பாதுகாத்தல் மற்றும் ஊக்குவித்தல், நெறிமுறை தரங்களை நிலைநிறுத்துதல் மற்றும் பத்திரிகையில் பொறுப்புணர்வை உறுதிப்படுத்துதல் ஆகியவை |

| | |
|---|---|
| | இதன் முதன்மை நோக்கமாகும்.<br>• வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை மேம்படுத்துவதில் ஊடகங்களின் பங்கை இது வலியுறுத்துகிறது.<br>.<br>• தகவல் பரப்புதல், பொது விழிப்புணர்வு மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கு பத்திரிகை சுதந்திரம் இன்றியமையாதது.<br>• இதழியல் துறையில் நெறிமுறை தரங்களைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் இது வலியுறுத்துகிறது. |
| **முதலமைச்சர் காலை உணவு திட்டம் (CMBFS)**<br> | **செய்தி:**<br>முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் (CMBFS) செயல்படுத்தப்பட்டதில் இருந்து கடந்த மூன்று மாதங்களில் தொடக்கப் பள்ளிகளில் மாணவர்களின் வருகை 4.28% அதிகரித்துள்ளது.<br>முக்கிய குறிப்புகள்:<br>• மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 07.05.2022 அன்று விதி 110-ன் கீழ் அரசுப் பள்ளிகளில் பயிலும் **1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை உணவு வழங்கப்படும்** என்று அறிவிக்கப்பட்டு, இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 15.09.2022 அன்று மதுரையில் தொடங்கி வைக்கப்பட்டது.<br>• **முதல் கட்டத்தில், மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகள் NHFS-5 தரவுகளின்படி இரத்த சோகையின் பாதிப்பு அதிகமாக** |

| | |
|---|---|
| | **உள்ளவை, மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் படி பொருளாதாரத்தில் பின்தங்கிய பகுதிகள், பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகள் மற்றும் அணுக முடியாத பகுதிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டன.**<br><br>• தற்போது 1545 அரசுப் பள்ளிகளில் படிக்கும் 1,14,095 தொடக்கப் பள்ளிக் குழந்தைகள் மொத்தமாக ரூ.33.56 கோடியில் இத்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படுவார்கள், இது படிப்படியாக மீதமுள்ள பள்ளிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். |

***பதிப்புரிமை © Adda247***

*அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் Adda247 இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.*